

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், செங்குன்றம் பகுதியில் தமிழ்நாடு அரசு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் டிஜி போட்டோ வீடியோ பேக்டரி பிரைவேட் லிமிடெட் சார்பில் தமிழ்நாடு அரசு மானியமாக ரூ.4.73 கோடி, குழுமத்தின் பங்களிப்பாக ரூ.1.56 கோடி என மொத்தம் ரூ.6.29 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நவீன புகைப்பட குறுங்குழும பொதுவசதி மையத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் குறு, சிறு தொழில் துறை அரசு செயலாளர் அர்ச்சனா பட்நாயக், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஒன்றியக்குழுத் தலைவர் உதயா கருணாகரன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நேற்று (10.09.2024) உர இருப்பு, உரத் தேவை மற்றும் உர விநியோகம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு. தனியரசு முன்னிலை! திருவெற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் வட்ட செயலாளர்

# ஜெயச்சந்திரன் இல்ல திருமண விழா! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ., வாழ்த்து!

## கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, செப். 11

திருவொற்றியூர் மேற்கு பகுதி மறைந்த 2வது வட்ட முன்னாள் செயலாளர் ஜெயச்சந்திரன் இல்ல திருமண விழா இன்று (11.09.2024 - புதன் கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை எண்ணூர் வியாபாரிகள் சங்க திருமண மாளிகையில் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற திருவொற்றியூர் பகுதி பொருளாளர் எஸ். ஆகாஷ் கீர்த்தனா ஆகியோர் திருமணம் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து மாலை 7 மணி அளவில் திருமண வரவேற்பு விழாவும் நடைபெற உள்ளது.



இவ்விழாவிற்கு சென்னைவடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமைவகிக்கிறார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 1வது மண்டல குழுத்தலைவர் மற்றும் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு, திருவொற்றியூர் மேற்கு பகுதி அவைத்தலைவர் நா.திருசங்கு, திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன், பெருநகர சென்னை மாநகராட்சி 2வது மண்டல குழுத்தலைவர் மற்றும் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாணவிழாவில் கழக அயலக அணி தலைவர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, கழக மீனவர் அணி துணைத் தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ.,

உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற மாநில செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை அறங்காவலர் பி.கே.பாபு, மாநில மனித உரிமை ஆணைய உறுப்பினர் வீ. கண்ணதாசன், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மாநில துணைச்செயலாளர்கள் ஜி.எம்.கலீம், கே.ராஜ்குமார், சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், சென்னை வடகிழக்கு மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன், திருவொற்றியூர் கிழக்கு பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ் பொன்னிவளவன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வி.தியாக ராஜன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார்,

உள்ளிட்ட இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள்மற்றும் கழக உடன் பிறப்புகள் கலந்து கொள்கின்றனர். திருவொற்றியூர் மேற்கு பகுதி நிர்வாகிகள் இ.குமரவேல், எம்.வஜ்ரவேல், எம்.சந்திரகுமார், யு.எஸ்.குறளரசன், எ.இந்துமதி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம் திருவெற்றியூர் பகுதி தலைவர் பா.அஜித் திருவொற்றியூர் பகுதி செயலாளர் எஸ். அஸ்வின் குமார், வட சென்னை மாவட்ட உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம் மாவட்ட துணைத்தலைவர் ஒற்றியூர் ஆ.பாலு நன்றிகூறுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி கோலடி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறையை கட்டிடத்தை திறந்து வைத்து நகராட்சி வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1 கோடியே 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான தொழில் கடனுக்கான காசோலைகளை வழங்கினார். உடன் நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, ஆணையர் தட்சிணாமூர்த்தி துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ் பொறியாளர் சுரேந்தர் நிர்வாகிகள் கவுன்சிலர்கள் ஏ.ஜெ.பவுல், எஸ்.சங்கர், கே.பி.எஸ்.சுதாகர், பென்ஜமின், ஜெ.சரவணன், பாண்டுரங்கன், நடராஜன், தெய்வசிகாமணி, பி.உமாபதி, இளங்கோ, எம். காந்தி, பிரதானம் , கஜா, குமார், ஆசைதம்பி ,சாந்தி ராஜா, என்.ராஜ், பேபிஸ்ரீ, இயேசு, அப்புஜெபராஜ் உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### 2024 - 25 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப்பின்படி

# சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கான முழு உடல் பரிசோதனை முகாம்!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, செப் 11-

2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப்பின் படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பணியாளர்களுக்கான முழு உடல் பரிசோதனை முகாமினை மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று (10.09.2024) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர் அவர் பேசும் போது தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மேயர் அவர்களின் 2024-25ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு-44ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனை (Master Health checkup) செய்ய அறிவிக்கப்பட்டது.

இந்த முழு உடல் பரிசோதனைக்கான விரிவான நெறிமுறைகளுடன், முழுமையான ஹீமோகிராம் மற்றும் ESR, சிறுநீர் பகுப்பாய்வு, இரத்த சர்க்கரை, இரத்த யூரியா, சீரம் கிரியேட்டின் பரிசோதனை, யூரிக் அமிலப் பரிசோதனை, கொழுப்புப் பரிசோதனை, கல்லீரல் செயல்பாடு பரிசோதனை, புரதம் மற்றும் அல்புமின், ஹெபடைடிஸ் பி, இரத்த வகை பரிசோதனை, இ.சி.ஜி., மார்பு டிஜிட்டல் எக்ஸ்ரே, வயிறு மற்றும் இடுப்பு பகுதிக்கான ஸ்கேன், கருப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை, கண் பரிசோதனை, பொது மருத்துவப் பரிசோதனை, டிஜிட்டல் மேமோகிராம் (தேவைப்படின்) உள்ளிட்ட 16 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களில் உள்ள 4,571 நிரந்தரப் பணியாளர்கள், 7,360 தற்காலிகப் பணியாளர்கள் என மொத்தம் 11,931 பணியாளர்களுக்கு முதற்கட்டமாக பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் மூன்று மாதங்களுக்குள் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மாநகராட்சிப் பணியாளர்களில் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்டவற்றிற்கு "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தில் தொடர்ந்து மருந்துகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த முகாம்கள் இராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள நாள் ஒன்றிற்கு ஒரு மருத்துவமனையில் 25 நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேல்சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுகாதாரத்துறைக்கு அறிவித்துள்ள திட்டங்களுடன் இணைத்து சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மூலம் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள கட்டணமாக ஒரு நபருக்கு ரூ.1000/- என நிர்ணயிக்கப்பட்டு, முதற்கட்டமாக 11,931 பணியாளர்களுக்கு ரூ.1,19,31,000/- பரிசோதனை கட்டணம் மாநகராட்சியின் மூலம் மருத்துவமனைக்கு செலுத்தப்படும். பரிசோதனையின் இறுதியில் ஒவ்வொருவருக்கும் பதிவு அட்டையில் அவர்களின் பரிசோதனை அறிக்கை, மருத்துவ அறிக்கை மற்றும் தொடர் சிகிச்சைக்கான ஆவணங்களும் அவர்களிடம் தரப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் பி. ஸ்ரீராமுலு, நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் ல. நவீன், திருமதி மோ. ரேணுகா, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பாலாஜி, மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி எழும்பூர் தெற்கு பகுதி 61 அ வட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. வட்ட கழக செயலாளர் இ. மொய்தீன் தலைமையில் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி. சுதாகர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், மாநில துணைச் செயலாளர் வே.உமாகாந்த், பகுதி அவைத் தலைவர் எஸ்.ரசூல், பகுதி துணைச் செயலாளர் மலர்மாறன், பகுதி துணைச் செயலாளர் அன்னபூரணி, மாவட்ட பிரதிநிதி வெற்றிவீரன் ஜெயக்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் அவை தலைவர் தமிழ்மணி, வட்ட கழக துணை செயலாளர் எம்.கே.ரவிவர்மன், கண்ணன், பொருளாளர் வி.சுரேஷ், பகுதி பிரதிநிதிகள் மணிராஜ் (எ) தாஸ் மு.செல்வராஜ், கிருஷ்ணமூர்த்தி, சேகர், இம்தியாஸ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் முத்து இப்ராஹீம் ஷா, ஏ. தங்க செல்வம், ஏ.ரஹிபுல்லா, கே.ஜெயகுமார், எம்.கிருஷ்ணன், மற்றும் தகவல் அணி பகுதி அமைப்பாளர் பிரியதர்ஷினி, பகுதி துணை அமைப்பாளர்கள் தனசேகர் (எ) பாபு, எஸ். பாலு மற்றும் BLA 2 BLC நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஆர்.டி.சேகர் எம்எல்ஏ., சிறப்புரை! டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஏ.சரவணன் பங்கேற்பு!

# பெரம்பூர் வடக்கு பகுதி 34 மற்றும் 37வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிவிப்பு!

சென்னை, செப்.11-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்ட பெரம்பூர் வடக்கு பகுதியில் உள்ள 34 மற்றும் 37 ஆகிய வட்டங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பின்வரும் விவரம் படி நடைபெறுகிறது.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம் எல்ஏ கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தொகுதி பொறுப்பாளர் ஏ.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

34வது வட்டம்:

தலைமை: வட்ட கழக செயலாளர் கே.வி.ராஜன் முன்னிலை : பகுதி செயலாளர் அ.முருகன் , 11:09:2024 புதன்கிழமை

மாலை 5:00 மணி

இடம் : பாலாஜி திருமண மாளிகை, பள்ளி சாலை, கொடுங்கையூர்.

37வது வட்டம்:

தலைமை வட்டக்கழக செயலாளர் : கே.இ. செந்தமிழ் அரசு

முன்னிலை : பகுதி செயலாளர் அ.முருகன், 11:09:2024 புதன்கிழமை மாலை 6:00 மணிக்கு

இடம்: எம்.எஸ்.திருமண மாளிகை எண்:557, கிழக்கு அவன்யூ சாலை , முல்லை நகர் பஸ் நிலையம் அருகில்.

மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டங்களில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள் ,மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள் , BLA2, BLC, கழகப் பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவாலங்காடு மேற்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் ஏற்பாட்டில் கனமாகசத்திரம் பகுதியில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கழக முப்பொரு விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்வதும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை ஒன்றியம் முழுவதும் கழக கொடி ஏற்றுவதும் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனை குறித்து சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட மாநில நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், ஆர்.டி.ஆதிசேசன், மோ.ரமேஷ், கே.ஜெயராமன், பி.சரவணன், கே.குப்பன், சுஜாதா குமார், க.அர்ஜீனன், குமரவேலன், கமலநாதன், கோபி, விஜயகுமாரி சரவணன், ம.கிரண், வி.எஸ்.நேதாஜி, பி.கே.நாகராஜ், ஆர்.யுவராஜ், டி.ஆர்.திலீபன், கே. வினாயகம், காமராஜ், வெங்கடாசலம், 1லூகா, சரத்குமார், பி.ஆர்.பாபு, சுரேஷ்பாபு, அம்பேத், திலகன், ராஜ்குமார், உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணைய அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளை கழக செயலாளர்கள் கிளைகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளனர்.